**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

**MCOP.No** 395/2015 **Date**: 06.01.2023

பெயர் - குமரேசன் - (**PW**1)

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

விபத்து நடந்ததாக சொல்லப்படும் நேரம் மாலை 5 மணி ஆகும். விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்று மருத்துவரிடம் நான் கூறினேனா? என்றால், நான் கூறவில்லை என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றவர்கள் கூறினார்கள். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது யார் என்றால், நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் என் தகப்பனார் புகார் கொடுத்தார். எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். நான் மருத்துவனையில் 10, 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு படிக்க தெரியும். எனக்கு மருத்துவமனையில் சேர்த்த பின்பு மயக்கம் எப்போது தெளிந்தது என்றால் 10 நாட்கள் கழித்து தான் தெரிந்தது. முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்தில் தகவல் கிடைத்த தேதியாக 30.06.2015 என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்த ம.சா.1 முதல் தகவல் அறிக்கையில் புகார் வாக்குமூலம் நான் அளித்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு 23.06.2015 ல் நினைவு திரும்பியபோது நான் புகார் கொடுத்தாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் அங்கு சுமார் எத்தனை நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால், அப்போது யாரும் இல்லை பின்னாடி வந்தவர்கள் தான் பார்த்துள்ளார்கள். என்னை மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு செய்து போது நான் நல்ல நிலையில் தான் சுயநினைவோடு இருந்தேன் என்றால், நான் வீட்டிற்கு வந்தவுடன் மறுபடியும் மயக்கமாக வந்ததால் மருத்துவமனையில் சேர்ந்துவிட்டேன். நான் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தான் விபத்து ஏற்பட்டதாக மருத்துவ விடுவிப்பு குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மருத்துவ விடுவிப்பு குறிப்பில் 21.06.2015 அன்று நான் சுயநினைவோடு இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். என் மீது மோதியதாக கூறப்படும் வாகனத்தின் பதிவெண்ணை எவ்வாறு கூறுகிறேன் என்றால் பக்கத்தில் இருந்தவர்கள் கூறினார்கள். அப்போது பக்கத்தில் யார் யார் இருந்தனர் என்றால் 3 பேர் இருந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியவில்லை. அவர்கள் தான் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தார்கள். நான் போலிசாரிடம் முதல் தகவல் அறிக்கைக்கு தகவல் கூறியபோது போலிசாரிடம் எந்த வண்டி என் மீது மோதியது என்று கூறினேனா? என்றால் கூறினேன். என் மீது பின்னால் வந்து

மோதிய வண்டியின் முன் பகுதி என் வண்டியில் பின் பகுதியில் மோதியுள்ளது. என் மீது மோதியதாக கூறப்படும் வாகனத்திற்கு சேதாரம் என்றால் இல்லை என்றால் சரிதான். என் வண்டியின் முன்புறம் முழுவதும் சேதாரம் என்றால் சரிதான். TN52 B 2434 என்ற வகானமே இந்த விபத்தில் சம்மந்தப்படவில்லை என்றால் சரியல்ல. நானே வேகமாக வண்டியை ஓட்டிச் சென்று கீழே விழுந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் என் வாகனத்தின் முன்புறத்திற்கு சேதாரம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் பூலாம்பட்டி காவல் நிலையத்தில் இருந்து 10 கிமீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். பூலாம்பட்டி காவல் நிலையம் எங்கள் வீட்டிலிருந்து 3 கிமீ தூரத்தில் உள்ளது. நான் மருத்துவமனையில் இருந்து 27.06.2015 அன்று விடுவிப்பு செய்யப்பட்டேன் என்றால் சரிதான். ஆனால் உடனே சரியாகாததால் மீண்டும் மருத்துவமனையில் சேர்ந்து விட்டேன். மருத்துவமனையில் போலிசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கி பின்னிட்டு வேறு எங்கும் விசாரிக்கவில்லை. ஊத்துக்குளி ராமசாமி மகன் பூபதி என்பவர் என் தந்தை ஆவார். என் தந்தையின் முன்னிலையில் காவல் நிலையத்தில் வைத்து வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை மருத்துவமனையில் வந்து பகலில் தான் விசாரித்தார்கள். இந்த விபத்து சம்மந்தமாக பதியப்பட்ட குற்றவழக்கு என்ன ஆனாது என்ற விவரம் தெரியுமா? என்றால் எனக்கு தெரியவில்லை. வெங்கடேசன், உத்திரசாமி திருமுருகன், சின்னராசு ஆகியோர்களை எனக்கு தெரியுமா? என்றால் தெரியாது. என்னை எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு யார்? அழைத்து சென்றார்கள் என்ற விவரம் தெரியுமா? என்றால் தெரியாது. தற்போது தெரிந்து கொண்டேன் அழைத்து சென்றவர் சின்ராசு. சின்ராசு விபத்தை நேரில் பார்த்தவர் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. எடப்பாடி அரசு மருத்துவமனையில் நானாக சென்று விழுந்துவிட்டதாக அதில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எடப்பாடி போலிசார் இவ்வழக்கை விசாரித்து இந்த வழக்கு உண்மைக்கு புறம்பானது என்று வழக்கு முடித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தான் தாறுமாறாக வண்டியை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தை எழுத்து மூலமாக புகார் கொடுத்தாரா? அல்லது வாய்மொழியாக புகார் கொடுத்தாரா? என்றால் வாய்மொழியாக தான் புகார் கொடுத்தார். 29.06.2015 அன்று HC கான்ஸ்டபிள் 250 சண்முககுமார் என்பவர் என்னிடம் வாக்குமூலம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். போலிசார் வாக்குமூலம் வாங்கினார்கள் அவர் பெயர் எனக்கு தெரியாது. நானாக சென்று கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் நான் நஷ்ட ஈடு வாங்கும் நோக்கத்துடன் 1 வது எதிர்மனுதாரருடன் சேர்ந்து இநத்

பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே அந்த வண்டி விபத்தில் ஈடுபட்டிருந்தால் 3 கிமீ தொலைவில் உள்ள காவல் நிலையத்தில் உடனடியாக புகார் கொடுத்திருப்பேன் அந்த வண்டி ஈடுபடாததால் தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் Beds நிறுவனத்தில வேலை பார்த்து ரூ.13000 மாத சம்பளம் OD யாக வேலை பார்த்து ஒரு நாளைக்கு கூடுதலாக 500 ருபாய் விதம் மொத்தம் ரூ.25000 வருமானம் ஈட்டினேன். மாதம் ரூ.25000 ரூபாய் வருமானம் பெற்றதாக கூறுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், ரூ.13000 வருமானம் பெற்றதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். என் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநர் பெயரை பின்னால் தெரிந்து கொண்டேனா? என்றால் தெரிந்து கொண்டேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது சத்தியமூர்த்தி என்று தெரிந்து கொண்டேன். சத்தியமூர்த்தி என்பவர் குற்றவியல் நீதிமன்றத்தில் பிணையில் சென்றாரா? அல்லது காவல் நிலைய பிணையில் சென்றாரா? என்று எனக்கு தெரியாது. TN52 B 2434 என்ற வாகனம் விபத்தில் ஈடுபடாததால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. கண் பார்வை, ஞாபக சத்தி குறைந்துவிட்டதாகவும், வாசனை எதுவும் தெரியவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மருத்துவபில்கள் அனைத்தும் வழக்கிற்காக மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. அட்வான்ஸ் தொகையும் சேர்த்து பில்லில் கோரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 119303, 119312, 119317 ஆகிய பில்கள் தனித்தனியாகவும், மொத்தபில்களிலும் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/- குமரேசன்

Sd/- S. Uma Maheswari,
Subordinate Judge,
Sankari.